[illegible]

V23. No.11. 23.1.51

3L
Q2ண211,N27M4
M51·23.11.

210432

339.
331
1-51.

ओं श्री गुरुभ्यो नमः

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

| | | |
|---|---|---|
| Vol. 23 | விக்ருதி ஸம்வத்ஸரம் புஷ்ய-மூ | No. 11 |
| புஸ்தகம் 23 | 23—1—'51 மங்களவாரம் | நெ. 11 |

## ஸ்ரீ பகவத் கீதை.

ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியார் எழுதியது
[காப்பிரைட் ரிஜிஸ்டர்.]

---

நான்காவது அத்யாயம்.

(முன் 184-ம் பக்கம் தொடர்ச்சி)

அவ்யயம் மற்றும் அது அவ்யயமான வேதத்தை ப்ரமாணமாய்க் கொண்டிருக்கிறது. அவ்யயமான மோக்ஷத்தை பலனாகக் கொண்டிருக்கிறது. அதனால் இந்த யோகம் க்ராஹ்யமானதாகும். நீர் முன்னடி சூர்யனுக்குத்தானேச் சொன்னீர். அதை ஜனகாதிகள் எப்படி அறிந்து அனுஷ்டித்தனர், என்று கேட்டால், அந்த சூரியன் தன் பிள்ளையான வைவஸ்வதமனுவுக்கு இதைச் சொன்னார். அந்த வைவஸ்வதமனு, அவருடைய பிள்ளையான இக்ஷ்வாகு ராஜனுக்கும், அவரால் அவருடை பிள்ளைக்கும் ஏவம் இவ்வாறு குருபரம்பரையால் கிரம

உபதேசம் செய்யப்பட்டு வெளியான இமம் இந்த கர்மயோகத்தையும், அல்லது க்ஞானயோகத்தையும் ராஜர்ஷய: ராஜாக்கள், ரிஷிகள், ரிஷிகளுக்கு ஸமானர்களான ராஜர்கள், விது: அறிவார்கள். ஏவம் ஏவ விது: இப்படித்தான் இப்பவும் அறிந்திருக்கின்றனர். அவிது: முன் அறிந்தனர். அப்படி இருக்கும் பக்ஷத்தில் நூதனமாய் ஏன் உன்னால் எனக்கு உபதேசிக்கப்படுகிறது என்றால், இப்போது இருப்பவர்களுக்கு தெரியவேண்டுமென்று நான் உபதேசிக்கிறேன் என்று. கிருஷ்ணா! நீர் பதில் சொன்னால், நான் கேட்பதாவது, இப்போது உள்ளவர்களும் ராஜர்ஷிகளைப்போல் அந்த உபதேச பரம்பரையில் அதை அறியவில்லையா? நீர் எனக்கு உபதேசிக்கவேண்டியதே அநாவசியமாயிற்றே! என்றால் ஸ: யோக: சூரியனுக்கு உபதேசம் செய்யப்பட்ட அந்த யோகம் மஹதாகாலேன உக்த: பஹு காலத்துக்கு பூர்வம் உபதேசிக்கப்பட்டதால் இஹ இந்த லோகத்தில் இந்த காலத்தில் நஷ்ட: நஷ்டமாகிவிட்டதைப்போல் இருந்து வருகிறது. நான் சொன்னபடிக்குள்ள ஸம்பிரதாயத்தைப் பிரவிருத்திப்பவர் இல்லாததால் அந்த ஸம்பிரதாயம் விச்சித்தி அடைந்து அது நாசமாகிவிட்டதாய் தோன்றுகிறது. ஸம்பிரதாயம் தெரியாமற் போனதால் அந்த யோகம், கோயில் ஜீர்ணமடைந்தால் எப்படியோ, அப்படி போயிருக்கிறது. ஜீர்ணோத்தாரத்திற்காக உனக்கு உபதேசிக்கிறேன். வேறு யாருக்காவது உபதேசிக்கலாகாதா என்றால் பக்த: அஸி ஸகாசஅஸி அர்ஜுனா: நீ இந்திரனின் அவதாரமாயும், நானுடைய அம்சமாயும், என் அருமைத் தங்கையின் பர்த்தாவாயும், என் அத்தையின் பிள்ளையாயும், என் வயதே உள்ளவனாயும், பால்யம் முதற்கொண்டு என் சிநேகிதனாயும், இருப்பதால், நான் சொல்லவும், நீ கேட்கவும், அருகனாய் இருக்கிறாய். சூரியனுக்கு உபதேசித்தது என்றால், அது மகத்வமுள்ளதாய் இருக்குமே என்றால் ஆமாம். புராதன: விஷயம் புராதனமானது. புராதனமான வேதத்தை பிரமாணமாய்க்கொண்டது. அப்பேர்பட்டது சொல்லப்படுது என்றால், ஸ ஏவாயம் அதுதான் உனக்குச் சொன்னது.





உண்டாயிற்று. கோடையால் வருந்திய ஜனங்கள் மழைகாலம் வந்தவுடன் வர்ஷித்துவில் எப்படி ஆனந்தமடைவார்களோ, ஸம்ஸாரத்தால் வருந்திய ஜனங்கள் மோக்ஷம் ஏற்பட்டவுடன் முக்தியில் எப்படி சந்தோஷமடைவார்களோ, அப்படித்தான் ஸ்ரீ ராமசந்திரன் இல்லாதிருந்த சமயம் அவருடைய பிரிவால் சங்கடமடைந்திருந்தவர்கள் ஸ்ரீ ராமருடைய பட்டாபிஷேகம் நடக்க ஏற்பாடான காலத்தில் மிகவும் சந்தோஷமடைந்தனர்.

15வது ஸர்க்கம் முடிந்தது.

---

## 16வது ஸர்க்கம்.

## ஸ்ரீ ராமபட்டாபிஷேக ஸர்க்கம்

ஸ்ரீ ராம பட்டாபிஷேகோற்சவத்திற்கு ஏற்பாடெல்லாம் முடிந்தபின் பட்டாபிஷேகதினத்தன்று, காலையில் சூரியன் உதயகிரி அடைந்தவுடன், எல்லா பிராம்மணர்களாலும் ஸ்வஸ்தி வாசனம் செய்துகொண்டவராய் ஸ்ரீ ராமசந்திரன் மஹத்தான காந்திபொருந்திய மாணிக்ய சிரேஷ்டங்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்த திவ்யமான மஹாமண்டபத்திற்கு வந்துசேர்ந்தார். உத்தமமான வேதமந்திரங்களிலும், பாஞ்சராத்திர ஆகமத்தின் விதிகளிலும் நிபுணர்களான வசிஷ்டாதிகளால், அபிமந்த்ரண பூர்வகமாய் அளிக்கப்பட்ட, விலையுயர்ந்த மாணிக்கங்களைக்கொண்டு மஹேந்திரனால் தயார் செய்யப்பட்டதான சிம்ஹாஸனத்தில் ஸர்வதேவோத்தமனான ஸ்ரீ ராமசந்திரன் உட்கார்ந்தார். சீதாதேவியார் தன் கோமளமான கால்களால் நடந்து அதிக காந்தியுடன் ஸ்ரீ ராமரின் பக்கத்தில் வெட்கத்துடன் வந்து நின்றாள். இதராளுக்கு கிடைக்கமுடியாததான தன்னுடைய அர்த்த சிம்ஹாஸனத்தில், ஸ்ரீ ராமர் அந்த சீதையை கையால் ஸ்வீகரித்து உட்கார்த்திவைத்துக்கொண்டார். சூரியன் தன் ஒளியால் எப்படியோ, அக்னி தன் ஜ்வாலையால் எப்படியோ, சந்திரன் நிலாவால் எப்படியோ, அப்படி சீதையால் ஸ்ரீ ராகவன் பிரகாசித்தார் என்று கவிவாணர்களின் வர்ணனை இருக்கட்டும்.

மகாலட்சுமிக்கும் அவருடைய பதியான மகாவிஷ்ணுவுக்கும் உபமானம் வேறு எதும் இல்லைதான். விளாமிச்சவேர் குங்கிலியம் அகரு இவைகளால் விருத்தியாக்கப்பட்ட தூபங்களின் புகை அங்கு அந்த பட்டாபிஷேக மண்டபத்தில் மேல்கட்டு ரத்தின சாதாரக்களால் தடுக்கப்பட்டு, அங்கு எறிந்துவந்த ரத்தின தீபங்களால் அலங்கரிக்கப்பட்டதாய் இருந்தது, மின்னலுடன் கூடிய நீருண்ட மேகத்தின் வேஷத்தை ஆசிரயித்திருந்தது. மிருதங்கம் பேரிகை படஹம் முதலான அடிக்கும் வாத்யங்கள் என்ன. வெங்கலசங்கம் ஆனகம் கோமுகம் முதலான, வாயால் சப்திக்கும் வாத்யங்கள் என்ன. குழல், வீணை திணுசுகள், காஹலீ என்னும் வாத்யங்கங்கள் என்ன, இவைகள் சப்தித்திடும் சப்தம் மற்ற சப்தங்களை குறைத்து விட்டன. அந்த ராமபட்டாபிஷேக மண்டபத்தில், ஸ்ரீ ராமர் விஷயமாய், விஷயபோகங்களில் ஈடுபடாதவர்களான தேவ லோகத்திய கந்தர்வர்களில் சிரேஷ்டமாளவர்கள் பாடினார்கள். எப்படி பாடினார்கள் என்று விவரிக்கப்படுகிறது ஸப்தஸ்வரங்கள் அதாவது நிஷாதம், ரிஷபம், காந்தாரம், ஷட்ஜம், மத்யமம், தைவதம், பஞ்சமம் என்று இந்த ஏழு ஸ்வரங்களையும், ஒவ்வொரு க்ராமம் அதாவது இப்போது சொல்லப்படும் ஸ்தாயிலும், 21 மூர்ச்சை ஏற்படும்படி பாடினர். "ஆச உத்தரமந்த்ரஸ்யாத் ரஜனீ சோத்தராதகா। சதுர்த்தீ சுத்த ஷட் ஜாது பஞ்சமீ மத்ஸரீ மதா। அச்வக்ராந்தா ததா ஷஷ்டீ ஸப்தமீ சாபிருத்ககா। ஷட்ஜக்ராம மச்ரிதா ஹ்யேதா விக்ஞேயா: ஸப்த மூர்ச்சனா:" என்று ஷட்ஜக்ராமத்திற்கு ஏழு மூர்ச்சைகள் இருக்கின்றன. இவ்வாறே ஷட்ஜக்ராமம். மத்யமக்ராமம், காந்தாரக்ராமம் என்ற ஸ்வர ஸமூகங்களின் ஸ்தானம் மூன்று உண்டு. இவ்வாறு ஒவ்வொரு க்ராமத்திலும் ஒவ்வொரு ஸ்வரத்தையும் இருபத்திஒன்று மூர்ச்சையுடன் கூடும்படி பாடினர். அப்படியே இந்த ஸப்தஸ்வரங்களின் சுருதிகளையும் விஸ்தாரப்படுத்தி வந்தனர். சுருதிகள் என்பது ஸ்வரங்களின் சப்தவிசேஷம். ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் இத்தனை சுருதிகள்தான் என்று வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

(தொடரும்)



ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

ஸ்ரீ ருக்மணீ ஸத்யபாமா ஸமேத ஸ்ரீ கிருஷ்ணாயநம:

# ஸங்கிரஹ பாகவதம்.

ஸ்ரீமத் சுகமுனிவரால் பரீக்ஷித்ராஜனுக்கு சொல்லப்பட்டதாயுள்ள ஸ்ரீமத் பாகவதம் ஸ்ரீ வேதவியாஸரால் இயற்றப்பட்டது. இந்த பூமியில் எங்கும் அஸுரர்களே பிறப்பெடுத்து, துர்ஜனர்களின் பாரத்தைத் தாங்காமல் பூதேவி, தன் பாரத்தைக் குறைக்க பிரம்மாதிகளை முன்னிட்டுக்கொண்டு க்ஷீரஸமுத்ரதீரத்தில், பகவான் நாராயணனைப் ப்ரார்த்திக்கவும், பகவான் பிரஸன்னராகி அவ்வாறே பூமியில் அவதாரமெடுத்துச் செய்வதாய் வாக்களித்து, பல வருஷங்களாய் நாராயணன் தனக்கு புத்திரராய் பிறக்கவேண்டுமென்று தவம் செய்திருந்த ஸத்யவதி தேவியிடம், பராசர முனிவரால், இப்பூமியில் க்ஞானப்ரத மூர்த்தியாய் க்ஞான காரியத்தை ஸாதிப்பதற்காக, ஸ்ரீ நாராயணன் ஸ்ரீ வேதவியாஸர் என்று அவதாரம் செய்தார். சரியான பாடம் இல்லாமலும், அபபாடம் ஏற்பட்டும், கெட்டுப்போயிருந்த அநந்தமான வேதங்களை நான்காய் விபாகம் செய்து காட்டினார். மனுஷ்யர்கள் மந்தபுத்தி உள்ளவர்களாய் இருப்பதைக்கண்டு, அவர்களிடம் கருணைகொண்டு, மற்றும் அந்த நான்கு வேதங்களை சாகோபசாகைகளாய் பிரித்துக்கொடுத்தார். ஜீவர்களின் துக்க நிவிருத்திக்காக வேதங்கள் வெளியாயிருப்பதால், அவ்வேதங்களின் அர்த்தம் இன்னது என்று பிரம்ம ஸூத்திரங்களை இயற்றி நிஷ்கரிஷை செய்துகொடுத்தார். வேதங்களை படித்தறிய அநர்ஹர்களான ஸ்திரீ சூத்ராதிகளின்

உத்தாரத்திற்காக வேதார்த்தங்களை இதிஹாஸபூர்வமாய் போதிக்கும் பதினெட்டு புராணங்களையும் பதினெட்டு உப புராணங்களையும் இயற்றினார். ஸகல வேதாந்தார்த்தங்களை வெளியாக்கும் இந்த ஸ்ரீமத் பாகவத புராணத்தை பதினெண்ணாயிரம் சுலோகங்களைக்கொண்டதாயும், பன்னிரண்டு ஸ்கந்தங்களைக் கொண்டதாயும், இயற்றியுள்ளார். ஸ்ரீ வேதவியாஸர் அதன் துவக்கத்தில் விக்னபரிகாரத்திற்காகவும் மற்றும் அநேக பலப்ரயோஜனங்கள் ஏற்படுவதற்காகவும், க்ஞானிகள் மங்களாசரணம் செய்யவேண்டுவது பாகவத தர்மம் என்று அறிவிப்பதற்காகவும் அவர் சுயம் நாராயணரின் அவதாரராயும், எப்போதும் பிரம்மஸ்வரூபத்தைப் பார்க்கும் அபரோக்ஷ க்ஞானியாயும், அதனால் அவருக்கு எந்த இடைஞ்சல்கள் ஏற்படமாட்டாதாயினும், மேற்கண்ட காரணங்களுக்காக என்று அடியிற்கண்ட முதல் சுலோகத்தால மங்களாசரணம் செய்துள்ளார்.

ஸ்ரீமத் பாகவதத்தில் அடங்கியுள்ள எல்லாகதைகளையும் ஸ்ரீ மத்வசித்தாந்த ப்ரமேயங்களையும் ஸ்ரீ விஜயத்வஜதீர்த்தர் தமது கம்பீரமான வ்யாக்யானத்தால் வெகு பிரபலமாய் நிரூபணம் செய்திருப்பதிலிருந்தும், மற்றும்பல மாத்வ மகனீயர்களின் வ்யாக்யானங்களிலிருந்தும் ஸாராம்சமானவைகளை ஸங்கிரஹித்தும் ஸங்கிரஹ பாகவதம் என்னும் இந்த நிரூபணத்தை உபன்யாஸ ரீதியில், வெகு ப்ரசித்த பாகவத வம்சத்தில் பிறந்தவரும், சுயம் பலவருஷங்கள் பிரபலமாய் பெருங்கூட்டத்தில் புராணபடனம் செய்துவந்தவருமான இம் மாத்வமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ ஆத்யம் பாகவத ரங்கனாதாசாரியாரால், ஸ்வதந்திரமாய், இம் மாத்வமித்திரன் வாசகர்களுக்காக வெளியிடப்படுகிறது. ஸ்ரீமத் பாகவத ப்ரதிபாத்யரான ஸ்ரீ ருக்மணி ஸத்யபாமா சமேத ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் எமது குருமார்களும் ஸர்வமங்களத்தையும் அளிப்பார்களாக. (தொடரும்)



## ஓர் செய்தி.

நாளது ௵ ஜனவரி ௴ 27, 28, 29, 30, 31௳ களில் ஸ்ரீ மத்வசித்தாந்த அபிவிருத்திகாரிணி சபையின் 47வது ௵ ஸம்மேளனமும் ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகளின் மகா சமாராதனை, ஸுதாமங்களம் மகோத்சவமும், தஞ்சை ஜில்லா மன்னார்குடிக்கடுத்த தென்பரை கிராமத்தில் நடைபெறும் என்றும் ரயில்வேஸ்டேஷனிலிருந்து பிரயாணவசதி, போஜன வசதி முதலியவைகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் அனைவரும் வர கேட்டுக்கொள்ளப்படுகின்றனரென்றும் ஷை சபையின் கௌரவ காரியதரிசி ராமாசாரியார் அறிவிக்கிறார்.

மாத்வமித்திரன் வாசகர்களின் பாக்யம் இதுவே. மகாபாரதம் இதன் பூராகதை ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் பூரா தமிழில் வெளியாகி போதிக்கப்பட்டுவிட்டது. ராமாயணம் இதன் பூரா கதை ஸங்கிரஹ ராமாயணம் பூராவும் தமிழில் இதுவரை வெளியாகி முடியும் தருவாயில் இருக்கிறது. ஸ்ரீமத் பாகவதம் இதன் பூரா கதைகளும் ஸ்தோத்திர பாகங்களில் பதுங்கி கிடக்கும் ஸ்ரீ மத்வமதத்தின் அத்யபூர்வ ப்ரமேய ரத்தினங்களின் ராசிகளும் ஸங்கிரஹ பாகவதம் இந்த இதழ் முதல் இனி தொடர்ந்து பிரசுரிக்கப்படுவதால் வெளியாகும். ஈடேற இதன் ப்ரதிபாத்யரான ஸ்ரீ ருக்மணீ ஸத்யபாமா சமேத ஸ்ரீ கிருஷ்ணர் அனுக்ரஹிப்பாராக.

அடுத்த இதழுடன் இம் மாத்வமித்திரன் தனது 23வது வருஷத்திய வாலியத்தை முடிக்கிறது. பகவத் கிருபையால் 24வது வாலியத்தை ஆரம்பிக்கும். சந்தாதாரர்கள் சந்தாதுகையையும் உதவித்துகையையும் அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வருட சந்தா ரூபா 3. Regd. No. M. 2419.

## விசேஷ தினங்கள்.

| | | |
|---|---|---|
| 2—2—51 | சுக்கிரவாரம் | ஏகாதசி உப. |
| 5—2—51 | சோமவாரம் | மணி 3-37க்குமேல் மகோதய புண்யகாலம் கோடி சூர்ய கிரஹணங்களுக்கு ஸமானம். |
| 6—2—51 | மங்களவாரம் | சிரவணம் உப. விஷ்ணுப. உப புரந்தரதாஸர் புண்யதினம். தர்சம். திலதர்ப்பணம். |
| 13—2—51 | மங்களவாரம் | ரதஸப்தமி. |
| 14—2—51 | புதவாரம் | பீஷ்மாஷ்டமி |
| 15—2—51 | குருவாரம் | ஸ்ரீ மத்வநவமி. |
| 17—2—51 | சனிவாரம் | ஏகாதசி உப. |
| 21—2—51 | புதவாரம் | பௌர்ணமி. மாகஸ்நானம் பூர்த்தி. |

Printed by N Subramania Iyer at Sri Venkateswar Power Printing Works
Edited & Published by Bhagavatha Ranganathachariar Kumbakonam.

185 185/2-51
12 APR 51 MADRAS

ஸ்ரீ ஸ்ரீ குருப்யோ நம:

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 23 | விக்ருதி ஸம்வத்ஸரம் மாக-மீ | No. 12
புஸ்தகம் 23 | 22—2—'51 குருவாரம் | நெ. 12

## ஸ்ரீ பகவத் கீதை.

ஸ்ரீ ம. வே. ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார் எழுதியது
[காப்பிரைட் ரிஜிஸ்டர்.]

4வது அத்யாயம்

(முன் 204-ம் பக்கம் தொடர்ச்சி)

பவத: ஜன்ம விவஸ்வத: ஜன்ம சூரியனுடைய ஜன்மாவுக்கும் உம்முடைய ஜன்மாவுக்கும் வெகுகாலத்திய வியவதானம் இருக்கிறதே என்றறிவிக்க, இரண்டுதரம் ஜன்ம என்னும் பதம் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாய் எண்ணலாம். அர்ஜுனன் க்ஞானியானதால் இவ்வாறு பிரசினம் செய்ததற்கு காரணம் ஸாமானிய க்ஞானம்படைத்தவர்கள் இவ்வாறு நினைப்பார்கள் என்று, அவர்களின் சம்சயத்தைப் போக்கத்தான் என்பதை பகவான் அறிவார். ஆயினும் பகவானின் ஜன்மாவானது இந்திரஜாலம்போல் பொய்யா அல்லது மெய்யேதானு? ஸத்யமாய் இருக்கும்பக்ஷத்தில் எப்படி அவருக்கு ஜன்மம் வரும், அந்த

சரீரம் எப்பேர்ப்பட்டது, அப்படி அந்த ஜன்மாவுக்கு காரணமென்ன? எப்பொழுது அந்த ஜன்மா ஏற்படுகிறது, எதற்காக அந்த ஜன்மா ஏற்படுகிறது, என்று அர்ஜுனன் ஆறு பிரசினங்கள் கேட்டதாய் அபிப்பிராயப்பட்டு பகவான் பதில் அளிக்கிறார்.

श्रीभगवानुवाच ॥

ஸ்ரீ பகவானுவாச ।

वहूनि मे व्यतीतानि जन्मानि तवाचार्जुन ।
तान्यहं वेद सर्वाणि नत्वं वेत्थ परंतप ॥ ॥ ५ ॥

5 பஹூனிமே வ்யதீதானி ஜன்மானி தவசார்ஜுன ।
தான்யஹம் வேத ஸர்வாணி நத்வம் வேத்த பரந்தப ॥

ஸ்ரீ பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உவாச பதில் சொல்லுகிறார்:- அர்ஜுன ! அர்ஜுனா ! மே என்னுடைய பஹூனி அநேக ஜன்மானி ஜன்மங்கள் வ்யதீதானி நடந்திருக்கின்றன. தவச உனக்கும் பஹூனி ஜன்மானி வ்யதீதானி அநேக ஜன்மங்கள் நடந்திருக்கின்றன. ஹே பரந்தப சத்ருவைக் கொல்பவனான அர்ஜுனா ! தானி ஜன்மானி அந்த ஜன்மங்களை அஹம் வேத நான் அறிவேன். த்வம் நவேத்த நீ தெரிந்தவனல்ல.

ஹே அர்ஜுனா ! கிழவனான என்னால், வ்ருத்தனான சூரியனுக்கு உபதேசம் செய்யப்பட்டதாய் சொன்னால், நான் எப்படி நம்புவேன் என்று கேட்கிறாய் சொல்கிறேன். வேறு ஜன்மத்தில் தான் நான் சூரியனுக்கு உபதேசம் செய்தேன் என்று அறி. அப்படியானால் வேறு ஜன்மத்தில் என்று நீ சொன்னதைக் கொண்டு, அது வேறு ஜன்மம், இது வேறு ஜன்மம், என்று ஏற்படுகிறது. இதனால் உனக்கும் அநேக ஜன்மாக்களும் மரணமும் உண்டு என்று ஏற்படுகிறது என்று நீ கேட்டால், ஆம், உண்மை. பஹூனிமே வ்யதீதானி ஜன்மானி எனக்கு அநேக ஜன்மங்கள் ஆகி இருக்கின்றன. எனக்குமட்டிலும் அல்ல





தவச உனக்கும்தான் அநேக ஜன்மாக்கள் ஆகிவிட்டன. அப்படியானால் எங்கள் இருவர்களுக்கும் என்ன வித்யாஸம், நீ குரு, நான் சிஷ்யன் என்பது எப்படி பொருந்தும் என்றால், என் ஜன்மாக்கள் ஒருவகை. உன் ஜன்மாக்கள் மற்றொருவகை. தானி அஹம்வேத எல்லா ஜன்மங்களையும் ஸர்வக்ஞனான ஈசுவரனாகிய நான் அறிவேன். நத்வம் அல்பக்ஞனாகிய ஜீவனான நீ அவைகளை அறியமாட்டாய். ஸர்வாணி நத்வம் வேத்த உன் ஜன்மாக்களை நீயே அறியாமல் இருக்கும்பொழுது, என் ஜன்மாக்களை நீ எப்படி அறிந்திருக்கப் போகிறாய். அஹம்வேத, நத்வம் வேத்த ஜன்மாக்களைக் கொண்டிருப்பதில் எனக்கும் உனக்கும் வித்யாஸம் இல்லாமல் இருப்பினும், க்ஞானத்தில் எனக்கும் உனக்கும் வித்யாஸம் இருக்கிறது. நீ அறியமாட்டாய், நான் அறிவேன் என்பதால், நீ அக்ஞன் என்றும், நான் ஸர்வக்ஞன் என்றும் ஏற்படுகிறது. வேத, வேத்த என்ற பத ப்ரயோகத்தாலேயே அஹம், த்வம் என்று ஏற்படினும், தனித்துச் சொன்னது ஸர்வக்ஞத்வாதிகுணங்கள் என்னிடம் இருக்கிறது, அக்ஞத்வாதி தோஷங்கள் உன்னிடம் இருக்கிறது. என்று சூசிக்கப்பட்டதாய் கொள்ளலாம். ஈசுவரனுடைய ஜன்மாக்கள் இந்திரஜாலம்போல் பொய்யல்ல. உண்மையே. என்பதற்கு தவ உன்னுடைய ஜன்மாக்களே திருஷ்டாந்தம். அவைகள் பொய்யல்ல. உன்னுடைய ஜன்மாக்கள் எப்படி நிஜமோ அப்படித்தான் ஸத்யமானவைகள். நான் ஈசுவரனாய் இருப்பதால் என் ஜன்மாவுக்கு அவதாரம் என்றும், மரணத்திற்கு அந்தர்தானம் என்றும் பெயர். நீ ஜீவனாய் இருப்பதால், உன் ஜன்மாவுக்கு ஜனனம் என்றும், ம்ருதிக்கு மரணம் என்று பெயர் ஏற்பட்டது. ஆகையால் ஜீவனாகிய உனக்கும் ஈசுவரனாகிய எனக்கும் எவ்வளவோ வித்யாஸம் இருக்கிறது என்று அறி.

अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपिसन् ।
प्रकृतिं स्वामधिष्टाय संभवाम्यात्म मायया ॥ ॥ ६ ॥

6 அஜோபி ஸன்னவ்யயாத்மா பூதானாமீச்வ ரோபிஸன்।
ப்ரகிருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்ம மாயயா॥

அஜ: அபி சரீரத்தால் உற்பத்தி இல்லாதவனாய் இருப்பினும் அவ்யயாத்மா ஸன் அபி நாசமில்லாத தேஹமுள்ளவனாய் இருப்பினும் பூதானாம் ஈச்வர: ஸன் அபி ப்ராணிகளுக்கு தலைவனாய் இருப்பினும் ஸ்வாம் என்னுடைய ப்ரகிருதிம் ஸ்வபாவத்தை அதிஷ்டாய ஆசிரயித்துக்கொண்டே இருந்து ஆத்மமாயயா என் இச்சையால் ஸம்பவாமி ப்ராதுர்பாவம் அடைகிறேன்.

கிருஷ்ணா! உனக்கு அநேக ஜன்மாக்கள் இருப்பதாய் ஒப்புக்கொள்கிறாயே! கர்மாவுக்கு வசனான ஜீவனைப்போல் கர்ம வசனாய் இல்லாத நீ, துக்கத்திற்கு காரணமான ஜன்மாவை ஏன் அனுபவிக்கிறாய் என்று அர்ஜுனன் பிரசினம் செய்தால், அதற்கு சமாதானமளிக்கப்படுகிறது. அஜ: உன்னைப்போல் ஜீவர்களாய் இருந்தால், ஜனனம் என்பது சரீரஸம்பந்தமும், மரணம் என்பது சரீரவியோகமும்தான் ஆகும். அதனால் பூர்வ ஜன்மம் போனால் மரண துக்கமும், முன் ஜன்மம் வந்தால் ஜனன துக்கமும் ஏற்படும். நான் உன்னைப்போல் அல்ல. அஜ: நான் ஸ்வரூபத்தாலும் சரீரத்தாலும் ஜன்மம் இல்லாதவன். அப்படியே அவ்யயாத்மா ஸ்வரூபத்தாலும் சரீரத்தாலும் நாசம் இல்லாதவன், ஆகையால் எனக்கு ஜன்மாவால் துக்கானுபவம் இல்லை. ஈசுவரத்தன்மைக்கும் குறைவில்லை. அதனால்தான் நான் ஜன்மாவை அனுபவிக்கிறேன். அஜனாயும் அவ்யயனாயும் இருப்பதால் ஜன்மமும் மரணமும் இல்லை என்றுதான் சொல்லலாமே ஒழிய, ஜன்மமே இல்லாதவனுக்கு ஜன்மதுக்கம் இல்லை என்று சொல்வது சரியல்லவே என்றால், அஜ: சுருதி என்னை அஜன் என்றும் அப்படியே அநேக ஜன்மங்களைக் கொண்டவன் என்றும் சொல்கிறது. "அஜாயமானோ பஹுதா விஜாயதே" என்கிறது தைத்திரீயம். அதனால் கர்மவசனான ஜீவனைப்போல் எனக்கு ஜன்மமில்லை என்றும், ஜீவனுடைய ஜன்மாவுக்கு விலக்ஷணமான அநேக ஜன்மாக்களைக்கொண்டவன் நான் என்றும் பொருள்படும். (தொடரும்)





# ஸ்ரீ மத்வரின் பூஜா விக்ரஹங்கள்.

## ஸ்ரீ மூலராமர் இருக்கும் மடம்.

(முன் 213-ம் பக்கம் தொடர்ச்சி)

ஸ்ரீ மத்வாசாரியார் இப் பெரியார்களுக்கு ஸத்ஸாதனமான பூஜார்த்தமாய் தலா ஒவ்வொருவருக்கு ஒன்றோ இரண்டோ பகவன் மூர்த்திகளைக் கொடுத்திருப்பதும், தம்முடைய சொந்த ஸம்ஸ்தானத்தில் அநேக பகவன் மூர்த்திகளை பூஜிக்கவைத்துக் கொண்டிருப்பதும், முற்றிலும் சம்பாவிதமே. இதனால் ஸ்ரீ மத்வாசாரியார் பூஜையிலிருந்த அநேக பகவன் மூர்த்திகளைக் கொண்ட மடம் ஸ்ரீ மத்வாசாரியாரின் மூல மகா ஸம்ஸ்தான மடம் என்றும், ஸ்ரீ மத்வாசாரியாருடைய ஒன்றிரண்டு பூஜா விக்ரகங்களைக் கொண்ட மடம் ஸ்ரீ மத்வாசாரியார் ஸாக்ஷாத்தாய் அனுக்ரஹித்த மடம் என்றும், நிச்சயம் ஏற்படுவதும் ஆக்ஷேபிக்க முடியாததாய் ஆகும். ஓர் மூக்யஸ்தரின் ஒன்றிரண்டு வஸ்துக்கள் இதரரிடம் இருந்தாலும், அவருடைய அதிகமான சொத்துக்கள் அவருடைய சொந்த வீட்டில்தான் இருக்குமென்பதை அனைவரும் அக்ஷேபிக்கமுடியமாட்டாதல்லவா ?

17. ஸ்ரீ மத்வாசாரியாரின் மகாஸம்ஸ்தானத்தில் பூஜையில் இருந்த பகவன் மூர்த்திகள் இருபத்திஎட்டு என்றும், அவைகள் உத்தராதி மடத்தில் இருப்பதாயும், ஹரிதாஸ கோஷ்டியாருக்கு தலைவராயும் ஸ்ரீ பாண்டுரங்கனை ப்ரத்யக்ஷமாக்கிக்கொண்ட அபரோக்ஷ க்ஞானியுமான ஸ்ரீ புரந்தரதாஸர் அவர்கள், நேரில் கண்டு அடியிற்கண்ட அழகிய பதத்தில் அவைகளை விபரமாய் அறிவித்துள்ளார்.

### श्री पुरंदरदासर पद

### रागमुखारि तालझंपे

मध्वरायर देवतार्चनेय प्रसिद्ध
रघुनाथरु पूजिसुव सोबगुनोडि ॥

210632

मूलरघुपति ओंदु मुद्दु जानकि ओंदु
लीलदिग्विजय राममूरुति ओंदु
सालग्रामहयग्रीव मोदलादवु नालकु
चलुव सुदर्शनमूरु चक्राणिकगळैदु (मध्व) ॥ १ ॥

अभिषेक शंखवोंदु अक्षयपात्रे ओंदु
उभय पश्चिमधेनुगळु येरडु
शुभनिधि बलमुरी शंखवोंदु
रामबाणगळेरडु रामटंकि ओंदु (मध्व) ॥ २ ॥

वरव्यास मुष्टि नालकु
क्षीरदि लोल्याडुव कूर्मवोंदु
स्मरिशिप्पत्तेंटु मूर्तिगळनु
पुरंदर विठलनपूर्ण भक्तरेंब
ईरघुनाथ तीर्थरूपट्टपुण्य वंतरो

## स्तोत्र

लक्ष्मीनारायण श्रीहयमुख दधिकृद्वामन श्रीधरेषु
व्यासाशा जेतृरामावनि जसहित श्रीजगन्मूलरामान् ।
वंदे श्रीरामनिष्कं ह्यमितमतिनुतं पंच सौदर्शनाख्यं
पंचार्यैक द्विबाणां बुजयुगसहितं चाक्षयाख्यंच पात्रं ॥

விபரமாவது :—

ஸ்ரீ மூலராமர் 1. சதுர்முகனுக்கு ஸ்வயம் வ்யக்தமான தாம்பிரவிக்ரஹம். அவராலும் மற்றும் சூரிய வம்சம் சந்திர வம்சம் ராஜர்களாலும் வாயுபகவானின் அவதாரங்களாலும் த்யர



பூஜிக்கப்பட்டது. ஸ்ரீ ராமரால் சுயம் தன் சன்னிதானம் விசேஷமாய் இருப்பதாய் பிரசித்தம் செய்யப்பட்ட பரமசுந்தர விக்ரஹம். இயற்கையில் சரீரத்தில் ஆபரணங்களையும், ஹஸ்த மூலத்தில் மூன்று கங்கணங்களையும் இடது காலில் வீரதண்டயம் வலது காலில் ஸுவர்ண நூபரம், தாமரைக்காய் பீடம் இவைகளைக் கொண்ட மகா மகாத்மியம் வாய்ந்தது.

ஸ்ரீ சீதை 1. ஸ்ரீ மூலராமருடன் சேர்ந்து ஸ்வயம் வ்யக்தமான அதிஸுந்தரமான தாம்பிரபீடம் பித்தளை விக்ரஹம். பின்னுடி தலைமயிர் முடியும், கழுத்தில் மங்கள சூத்ரமும், இயற்கையிலேயே கொண்டது. வலதுகையில் அமிர்த கலசமும் இடது கையில் தாமரை மலரும் பிரகாசிப்பது. பர்த்தாவின் நாபிக்குமேல் ஓர் யவம் உயரம் உயர்ந்திருப்பது.

ராமடங்கி 1. ராமராஜ்யத்தில் ஸ்ரீ ராமரின் உருவம் பதியப்பட்டு வழங்கிய தங்க நாணயம். ஸ்ரீ மூலராமருடன் கலிங்க ராஜனின் பொக்கிஷத்தில் இருந்தது.

ஸ்ரீ திக்விஜயராமர் 1. ஸ்ரீ மத்வாசாரியார் தம் வாழ்நாள் பூராவும் தொடர்ந்து பூஜித்த அவருடைய மகாஸம்ஸ்தான ப்ரதான விக்ரஹம்.

ஸாலக்ராமங்கள் 4. லக்ஷ்மீநாராயணர், ஹயக்ரீவர், ததிவாமனர், ஸ்ரீதரர் ஆகிய இந்த மூர்த்த ஸாலக்ராமங்கள் 4. அந்தந்த லக்ஷணங்களுக்குரிய உத்தமவர்ணம் சக்ரங்கள் வதனங்கள் கொண்டவை.

வியாஸ முஷ்டிகள் 5. ஸ்ரீ வியாஸரின் பிரேரணையின் பேரில் பதரிகாசிரமத்தில் ஸ்ரீ நாராயணரால் ஸ்ரீ மத்வாசாரியாருக்கு கொடுக்கப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீ நாராயணரின் விசேஷ ஸன்னிதானம் பெற்ற மணல் உருண்டைகள் 8. அஷ்டவ்யாஸமுஷ்டிகள் என்று பிரசித்தமானவை, ஸ்ரீ மத்வாசாரியார் தம் காலை பூஜைக்காக ஒன்றை ஸுப்ரம்மண்ய மடத்திலும் மத்யான்ஹ பூஜைக்காக ஒன்றை மத்யதாள மடத்திலும் வைத்திருந்தார்.

(தொடரும்)

# ஸங்கிரஹ பாகவதம்.

[ஸ்ரீ ஆத்யம் பாகவத ரங்கனுதாசாரியார் தொகுத்தது]

(முன் 194-ம் பக்கம்தொடர்ச்சி)

जन्माद्यस्य यतोऽन्वयादितरतश्चार्थेष्वभिज्ञः स्वराट्
तेने ब्रह्महृदाय आदिकवये मुह्यंतियं सूरयः ।
तेजोवारि मृदां यथाविनिमयो यत्र त्रिसर्गोमृषा
धाम्नास्वेन सदा निरस्तकुहकं सत्यं परं धीमहि ॥

ஜன்மாத்யஸ்ய யதோன்வயாதிரத: சார்த்தேஷ்வ பிக்ஞ: ஸ்வராட்
தேனே ப்ரம்ம ஹ்ருதாய ஆதிகவயே முஹ்யந்தியம் ஸூரய: ।
தேஜோவாரி மிருதாம் யதா வினிமயோ யத்ர த்ரிஸர்க்கோ ம்ருஷா
தாம்னஸ்வேன ஸதா நிரஸ்த குஹகம் ஸத்யம் பரம் தீமஹி॥

அஸ்ய ஜன்மாதி யத:; அன்வயாத் இதரதஸ்ச; ய: அர்த்தேஷு அபிக்ஞ; ய: ஸ்வராட்; யஸ்ச ப்ரம்ம ஹ்ருதா ஆதிகவயே தேனே, யம் ப்ரதி ஸூரயோ முஹ்யந்தி; தேஜோ வாரி மிருதாம் வினிமிய: யதா ததா த்ரிஸர்க்கோபி யத்ர ம்ருஷா; தம் ஸ்வேன தாம்ன ஸதா நிரஸ்த குஹகம்; ஸத்யம்; பரம்; தீமஹி என்று இந்த சுலோகத்திற்கு அன்வயம் செய்யப்படலாம்.

தீமஹி த்யானம் செய்கிறோம் என்றார். யாரை என்றால் பரம் குணபூர்ணரான நாராயணரை எனப்பட்டது. ஓர் கிரந்தத்தை ஆரம்பிக்கும் முன்பு நமஸ்காரம் செய்யப்படும் தேவதைகள் இரண்டு விதமாய் உண்டு. ஜ்யோதிச் சாஸ்திரத்தில் அதன் அதிகாரியான சூரியனுக்கு நமஸ்காரம் செய்யப்படும். தனக்கு இஷ்டமான தேவதை முதலில் நமஸ்காரம் செய்யப்படுவது மற்றொருவகை. பகவான் நாராயணர் இந்த பாகவதத்திற்கு இருவகையான தேவதையும் ஆவார். பகவான் நாராயணர்தான் எல்லா ப்ராணிகளுக்கும் சம்சாரத்திலிருந்து மோக்ஷமளிப்பவர்.



என்று இந்த பாகவதமாகிய சாஸ்திரத்தில் சொல்லப்படுவதால், அவருக்கு இந்தவகையில் நமஸ்காரம் செய்வது பொருந்தும். அவர் தான் பெண்டாட்டி பிள்ளையைவிட மிகவும் ப்ரியமானதால் அந்தவகையிலும் நமஸ்காரம் பொருந்தும். மற்றும் பரன் எனப்படுபவர் நாராயணர்தான். "யதேதத் பரம் பிரம்ம வேதவாதேஷு பட்யதே। ஸதேவ புண்டரீகாக்ஷ: ஸ்வயம் நாராயண: பர:" என்கிறது ஹரிவம்சம். "ப்ரம்ம விதாப்னோதிபரம்" என்கிறது சுருதி.

பரன் என்ற வார்த்தையால் குறிப்பிட்ட குணங்களை விவரிக்கிறார். யத: அந்த பகவானிடமிருந்து அஸ்ய ப்ரத்யக்ஷமாய் கண்ணிற்கு தென்பட்டுக்கொண்டிருக்கும் இந்த உலகத்துக்கு ஜன்மாதி சிருஷ்டிமுதலானவைகள் உண்டாகின்றன. என்றால் இந்த ஜகத்திற்கு சிருஷ்டித்தல், ஸம்ரக்ஷித்தல், ஸம்ஹாரம் செய்தல், நியமனம் செய்தல், க்ஞானமளித்தல, அக்ஞானமளித்தல், பந்தனமளித்தல், மோக்ஷமளித்தல் ஆகிய எட்டுவகை கர்த்ருத்வமும் நாராயணரால்தான் ஏற்படுகிறது; இவைகளில் ஒவ்வொன்றும் பரபிரம்மமாகிய நாராயணருடைய லக்ஷணமே ஆகும்.

ஜன்மாதிகளுக்கு பரனுயிருப்பவர் காரணமானவர் என்று எப்படி தெரிகிறது என்றால், அன்வயாத் என்று சொல்லப்பட்டது. "யதோவா இமானி பூதானி ஜாயந்தே யேனஜாதானி ஜீவந்தி" "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவ: மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே" "ஸ்ரஷ்டா பாதா ததைவாத்தா நிகிலஸ்ய ஏக ஏவது" இந்தப்படி காணப்படும் சுருதி ஸ்மிருதிகளை ஜகத்காரணரென்று ஸ்ரீ நாராயணரிடம் அன்வயிக்கப்படுகிறது உபக்ரமம், உபஸம்ஹாரம் முதலான எட்டுவகை தாத்பரிய லிங்கங்களாலும், பரனுன பிரம்மமாகிற அந்த நாராயணர்தான் ஜகத்துக்கு காரணமானவர், வேறு யாருமாகமாட்டார். ருத்ராதிகளுக்கும் ஜகத்தின் காரணத்வம் இருப்பதாய் வேதத்தில் சொல்லப்படுகிறதே, அப்படி இருக்க பரனுக்குத்தான் ஜகஜ்ஜன்மாதி காரணத்வம் எப்படி சொல்லப்படும் என்றால், வேதத்தில் ஏகதேசமாய் ஒரு சில

இடத்தில் தான் ருத்திராதிகளுக்கு அவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. அநந்தமான ஸம்பூர்ண வேதத்தாலும் சொல்லப்படுபவர் அந்த விஷ்ணுவேதான் ஆவார். "ஸர்வே வேதா யத்பதமாமனந்தி, வேதைஸ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்று இந்தப்படி சுருதி ஸ்மிருதிகள் இருந்துவருவதால் எனப்படுகிறது.

சுருதி முதலானவைகள் அர்த்தமில்லாத வார்த்தைகளைக் கொண்டிருத்தல் முதலான காரணங்களால் ஏன் அபிரமாணமாகாது; அப்பேர்ப்பட்ட வேதங்கள் சொல்வது எப்படி நிச்சயமாகும். பரமாணுக்களின் ஸமூகங்கள் தான் இந்த ஜகத்துக்கு காரணம், பகவான் அல்ல, என்று ஏன் சொல்லிவிடலாகாது என்று ஆக்ஷேபணை ஏற்பட்டால், அதற்காக இதாத: என்று அறிவிக்கப்பட்டது. ப்ரத்யக்ஷமும் ஆகமும் ஆதாரமாய்க்கொண்ட தர்க்கத்தாலும் பரபிரம்மத்துக்கு ஜகஜ்ஜன்மாதிகாரணத்வம் ஸித்திக்கிறது. விச்வம் விஷ்ணுகர்த்ருகம், ததிகாரகார்யத்வே ஸதி கார்யத்வாத் என்பது தர்க்கம், அனுமானமாகும் பரமாணு புஞ்ஜம் ஜகத்திற்கு காரணமாகமாட்டாது என்று பிரம்மசூத்திரம் இரண்டாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில் "ஓம் ஸமுதாய உபயஹேதுகே ததப்ராப்தி: ஓம்" என்ற சூத்ரத்தில் பரமாணு புஞ்ஜவாதம் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. பிரதானம் கேவலம் அசேதனமானதால் புத்தி பூர்வகமான ஜகக்கர்த்ருத்வம் அதற்கு ஏற்படமாட்டாது. தவிரவும் அது அஸ்வதந்திரமானதாலும் ஏற்படமாட்டாது. சேதனமான தந்தையால் புத்ராதிகள் உற்பத்திசெய்கிறபடியால், அந்த திருஷ்டாந்தத்தைக் கொண்டு பிரம்மாதி சேதனர்களான ஜகத்து பரமசேதனரான விஷ்ணுவால் சிருஷ்டிக்கப்படுகிறது என்று தர்க்கம் சொல்லப்படும். வேதம் அபௌருஷேயமாய் அதன் கர்த்தா இன்னார் என்று பிரசித்தி இல்லாததால் வேதம் சந்தேகாஸ்பதமில்லாத பிரமாணமாகிறது. அதனால் வேதத்தை ஆதாரமாகக்கொண்ட தர்க்கம் ப்ரதிதர்க்கத்தால் அடிபட்டுப்போகும் என்று சந்தேகமில்லை.

(தொடரும்)



## ஸ்ரீ விஜயிந்திர ஸ்வாமிகளின் சரித்திரம்.

---

(முன் 208-ம் பக்கம் தொடர்ச்சி)

இந்தப்படி ஸ்பஷ்டமாய் பாடி கும்பகோணத்திலுள்ள ஸ்ரீ கும்பேசுவரரைப் பார்த்து ஸ்ரீ புரந்தரதாஸர் அகமகிழ்ந்தார்.

இப்படியேதான் ஸ்ரீ வாதிராஜ ஸ்வாமிகளும் இச்சமயம் கும்பகோணம் வந்து, ஸ்ரீ சக்ரபாணி ஸ்வாமியின் சன்னதியில் ஓர் வீராஞ்ஜனேயரை ஸ்தாபித்து, பூதப்ரேத பிசாசாதிகளின் நிவிருத்திக்காக ஸ்ரீ சக்கரபாணி ஸ்வாமியை சேவைசெய்யும் எண்ணிறந்த பக்தர்களுக்கு ஸ்ரீ ஆஞ்ஜனேயரின் அனுக்ரஹமும் ஏற்படச் செய்தார். ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமியின் விக்ரஹத்தின் ஸௌந்தர்யத்தைக் கண்டு அதி ஆச்சரியப்பட்டு இப்பேர்பட்ட அழகுவாய்ந்த விக்ரஹத்தை நான எங்கும் கண்டதில்லை என்று வியந்து இரண்டு சுலோகங்களால் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமியை பரதா ஸ்தோத்திரம் செய்தார். அந்த சுலோகங்களாவன.— "கும்பகோணே வஸ ஸ்ரீச சாரங்கமாச்சாதய ப்ரபோ। ததாப்ய துளஸீவன்யைர் ஜனஸ்த்வாம் ஜானதே அச்யுத॥ ஹ்ருத பூபாரதைத்ய க்ருத விச்வஜனாவன। சாரங்கபாணே சராணும் தேரக்ஷன் பாபானி மேதனு॥" இதன் பொருள் :— ஹே லக்ஷ்மீபதியே! கண்டுவிட்டேன் உம்மை. கும்பகோணத்திலேயே ஒளிந்து பதுங்கி உம் இஷ்டப்படி வாசம் செய்யும்; ஸ்ரீ சாரங்கபாணி என்ற பெயர் பிரசித்தமாய் போயிருப்பினும் சாரங்க மென்னும் தனுஸ்ஸை வெளியேகாட்டாமல் உள்ளேயே மறைத்துக்கொள்ளும். ஆனால் என்ன ?, உம்முடைய இணையற்ற முகத்தின் அழகை ஜனங்கள் பார்த்துவிட்டால், உம்மை கட்டாயம் அச்யுதன் மகாவிஷ்ணு என்று மகாஜனங்கள் கண்டுபிடித்தே விடுவார்கள். பூமிக்கு பாரமாய் இருக்கும் அஸுரர்களை ஸ்ரீ சாரங்கபாணியான நீர் ஸம்ஹாரம் செய்து பூமியின் பாரத்தைக் குறைத்தவர். அதனால் ஸமஸ்தமான ஸாது ஜனங்களை ஸம்ரக்ஷித்தவர். அப்பேர்ப்பட்ட ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி பரபிரம்மமே! கும்பகோண வாஸியே! உங்களுடைய பாணங்

களுக்கு என் பாபங்களை இப்போது லக்ஷியமாக்கி என்னை ஸம்ரக்ஷிப்பீராக" என்றார். இந்த சுலோகங்கள் ஸ்ரீ வாதிராஜர் இயற்றிய தீர்த்த ப்ரபந்தத்தில் இடம் பெற்றிருக்கின்றன

ஸ்ரீ வாதிராஜர் ஸ்ரீ விஜயீந்திரரின் சகபாடி ஆவார். இவ்விருவர்களும் ஸ்ரீ வியாஸராஜரிடம் சேர்ந்து வித்யாப்யாஸம் செய்தவர்கள். மகா பாண்டித்யம் படைத்தவர்கள். மந்திர சாஸ்திரத்தில் மகா நிபுணர்கள். அத்துடன் மகா யோக ஸித்தி பெற்றவர்கள். இருவர்களுக்கும் தொண்டுபுரிய அமானுஷ்ய கிருத்தியங்களைச் செய்யும் பூதங்கள் இருந்தன. இருவர்களும் சைவமதத்தை வெகு ப்ரபலமாய் கண்டித்து, ஞாதாக்களில் விசேஷ க்யாதி பெற்றவர்கள். இருவர்களும் பல்லக்கில் ஏறி தேச சஞ்சாரம் செய்துவந்த சந்தர்ப்பத்தில் ஓர் ஆரண்யத்தில் ஒத்தடிப் பாதையில் இவ்விருவர்களும் சந்தித்தனர். யார் யாருடைய பல்லக்குக்கு ஒதுங்கி இடம் தரவேண்டுமென்று பிரச்னை ஏற்பட்டது. இவ்விருவர்களில் உத்தமர்கள் எவரோ அவருக்கு மற்றொருவர் ஒதுங்கி இடம் தரவேண்டுமென்று பொதுவாய் இருவர்களும் ஒப்புக்கொண்டனர். ஸ்ரீ விஜயீந்திரர் அநாராத்ய காளீம் அநாஸ்வாத்ய கோளீம், விஞ மந்த்ரதந்த்ரே ரிதே சப்த சௌர்யாத் ப்ரபஞ்ச ப்ரஸித்தப்ரபந்தம் விதாதும் விரிஞ்சி ப்ரபஞ்சே மதன்ய: கவி: க:" என்று தான் சுயமாக கவிதை செய்யும் மகா சாமர்த்தியம் பெற்றிருப்பதாய் சொல்லியுள்ளார் என்பதை ஸ்ரீ வாதிராஜர் அறிவார். ஸ்ரீ வாதிராஜர் ஸ்ரீ ஹயக்ரீவரின் உபாஸகர் என்றும் யுக்திமல்லிகாதி அவருடைய நூல்களில் அதி அற்புதமாய் கவிதை செய்பவர் என்றும் உலக ப்ரசித்தம். ஆதலால் ஸ்ரீ விஜயீந்திரருடன் சுலோக கவிதையில் போட்டிபோட ஸ்ரீ வாதிராஜர் அபிப்பிராயப்பட்டார். உடனே மகா தீரரான ஸ்ரீ விஜயீந்திரர், ஒரு சுலோகத்தையே கவனம் செய்வோம். அதில் ஒரு பாதியில் யார் அதிகமாய் பாண்டித்யத்தைக் காட்டுவாரோ அவர்தான் உத்தமர் ஆவார் என்றார்.

(தொடரும்)



# ச்ராத்தபோதினி.

(முன் 198-ம் பக்கம் தொடர்ச்சி)

குறிப்பு :— சிராத்ததினத்தன்று சிராத்தம் செய்யப்படும் அந்த வீடோ, வீட்டின் அந்த பாகமோ பசுஞ் சாணத்தால் மெழுகப்படவேண்டும். கோலம் போடலாகாது. சிராத்தம் முடியும் முன், இதராளுக்கு எந்த வஸ்துவையும் கொடுக்கலாகாது. குழந்தைகளுக்குகூட போஜனமளிக்கக்கூடாது. வீட்டில் எவ்வகை சப்தமும் இருக்கலாகாது. சமாதானமும் நிம்மதியும் சாந்தியுங்கான் சிராத்தம் முடியும்வரையிலாவது நிலவியிருக்கவேண்டும். கைக்கழிகளும், மடி வஸ்திரங்களை உலர்த்தச் செய்யும் கோலும்கூட சிராத்ததினத்தில் கண்ணிற்படும்படி இருக்கலாகாது. அன்றே நனைத்து உலர்ந்த வஸ்திரமுடுத்து சமையலையும் சிராத்தத்தையும் செய்யவேண்டும். த்வாதசி போன்ற உபவாஸ பாரணை தினமாய் இருந்தால் உபவாஸ தினத்தில் காயப்போட்ட வஸ்திரங்களையும் சேகரம்பண்ணப்பட்ட உதகாதிகளையும் உபயோகப்படுத்தலாம். சமையல் ஆரம்பிக்கும் முன் அடுப்பில் துளசிகாஷ்டத்தை சேர்த்திருக்க வேண்டும். சிராத்தகர்த்தா உடுக்கும் வஸ்திரத்தையும் உத்தரீயத்தையும் தரித்திருக்கவேண்டும். கிழிசல், தையல்போட்டது, கலர் உள்ளது, கரைஇல்லாத கண்டவஸ்திரம், மல் முதலானவைகளை உடுத்திருக்கலாகாது. தொங்கும் கச்சத்துடன் வஸ்திரத்தை உடுத்தி சிராத்தத்தைச் செய்யலாகாது; த்ரிகச்சமோ, பஞ்சகச்சமோ அவசியம். நாம முத்திரைகளை தரித்து ஸந்தியாவந்தனம், பாபபுருஷ விஸர்ஜனம், நிர்மால்ய தீர்த்த க்ரஹணம், காதில் துளஸீதாரணம் முதலானவைகளைச் செய்திருக்கவேண்டும். வெந்நீரில் ஸ்நானம் செய்து சிராத்தம் செய்யலாம். சிராத்தத்தை மத்தியான்ஹ காலத்தில் அதாவது காலை சுமார் $10\frac{1}{2}$ மணிக்கு ஆரம்பிக்கலாம். பாரணை தினத்தன்றுதான் சூரிய உதயமானவுடன் ஆரம்பிக்கப்படலாம். பவித்ரத்துடன் ஆசமனம் செய்யலாகாது. ஆசமனம் செய்துவிட்டால் அந்த பவித்ரத்தை விட்டெறிந்துவிடவேண்டும். பவித்ரத்தின் முடிச்சை அவிழ்த்துவிட்டபின்தான் அதை விஸர்ஜனம் செய்யவேண்டும். ஸங்கல்பம் செய்யப்படும்பொழுது, யாருடைய சிராத்தம் செய்யப்படுகிறதோ, அவருடைய இறந்த திதியைத்தான் உச்சரிக்கவேண்டும். சிராத்தத்தை செய்யும் நாளில் இரண்டு திதிகள் இருந்தாலும், சிராத்தத்தை ஆரம்பிக்கும் நேரத்தில் அந்த மரண திதி வராதிருந்தாலும், மரண திதியைத்தான் சிறிதும் யோசனையன்னியில் சொல்ல வேண்டும். மரண திதி ஏகாதசியாய் இருந்து, சிராத்தம் செய்யப்படும்

அந்த நாள், வித்த ஏகாதசியாக போஜனம் செய்யும் நாளாக இருந்தால் "வித்த ஏகாதச்யாம்" என்று சொல்லவேண்டும். உபவாஸதினமாய் இருந்தாலோ சிராத்தத்தை செய்யவே கூடாது

பவித்ரம் என்ற பதம் இம் மந்திரத்தில் இருந்துவரும் காரணத்தால் பவித்ரதாரணத்திற்கு இம் மந்திரம் உபயோகிக்கப்படுகிறது. எந்த காரியத்திற்கும் முன்னோடி வாக வந்த் தருவதாக உள்ள ஸங்கல்பம் மிகவும் அவசியம். அதை சிரத்தையாகவே இரண்டு கைகளைச் சேர்த்து ப்ரதிக்ஞை செய்வது உத்தமம். இங்கே காட்டப்பட்டிருக்கும் ஸங்கல்ப்பம் ஒருவனுடைய தந்தையின் ச்ராத்தத்தில் செய்யவேண்டியதாய் உள்ளது. யாருடைய சிராத்தத்தை, தான் செய்கிறானோ, தனக்கும் அந்த நபருக்கும் இருக்கும் சாஸ்திரீயமான சம்பந்தத்தை சங்கல்பத்திலும் கவனத்துடன் சொல்லவேண்டும், அந்த நபரின் நாமாவையும் கோத்திரத்தையும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த குறித்த நபருக்கு அவர் எங்கிருந்தபோதிலும் பித்ருக்கள் திருப்தி செய்விப்பார்கள். அந்த குறிப்பான பேருடைய அடையாளம் தவறாமல் ஏற்படச்செய்ய அவருடைய தந்தையையும் பாட்டனையும் பெயர் சொல்லிக் குறிக்கவேண்டும். பெயர் தெரியாமல் இருந்தால் யக்ஞர் என்ற பெயரை உபயோகிக்கலாம்.

சிராத்தத்தை இன்னவிதமாய்ச் செய்கிறேன் என்று சொல்லப்படவேண்டும் நான் செய்யும் சிராத்தத்தில் விச்வேதேவஸ்தானம் உண்டு என்றறிவிக்கத்தான் ஸதைவம் என்று சொல்லப்படுகிறது. சில சிராத்தங்களில் அவ்வாறு விச்வேதேவர்கள் இல்லாமல் இருக்கின்றன. பிண்டம் இல்லாமலும் சில ச்ராத்தங்கள இருந்துவருவதால், தான் செய்யப்போகும் இந்த ச்ராத்தத்தில் பிண்டம் அளிக்கிறேன் என்று ஸபிண்டம் என்று அறிவிக்கப்படுகிறது. ஏகோத்திஷ்ட விதியின்படி இந்த ச்ராத்தத்தை நான் செய்யப்போவதில்லை என்று அறிவிக்க பார்வணேனவிதினா என்று சங்கல்பத்தில் சொல்லப்படுகிறது. அமாவாசை சிராத்தாதிகள் போல் அல்லாமல் அன்னத்தை இந்த சிராத்தத்தில் உபயோகிக்கிறேன் என்று அறிவிக்க அன்னேன ஹவிஷா என்று சொல்லப்படுகிறது. நாளைக்கு அல்ல, இன்றைக்கே எல்லாவற்றையும் சேர்த்துச் செய்கிறேன் என்று அறிவிக்க, யுகபத் அத்ய கரிஷ்யே என்று சங்கல்ப்பம் செய்யப்படுகிறது எந்த சிரார்த்தம் என்றால் வருஷத்திற்கு ஒருமுறை ஒவ்வொரு வருஷமும் செய்யப்படவேண்டிய சிராத்தத்தைச் செய்கிறேன் என்றறிவிக்க ப்ரதிஸாம்வத்ஸரிக சிராத்தம் என்று சொல்லப்படுகிறது. அப்படியே செய்யவும் என்று பிராம்மணன் பதில் அனுமதித்தரவேண்டும்.



## II

## பிராம்மண வரணம்

1. (ஸவ்ய] ததங்க பிராம்மண வரணம் கரிஷ்யே (என்று ஸவ்யத்துடன் அதாவது வலது பார்சுவத்தில் யக்ஞோபவீதத்துடன் அரிசியுடன் ஜலத்தை விடவேண்டும்) குருஷ்வ (என்று பிராம்மணனின் பதில் வேண்டும்)

2. புரூரவ ஆர்த்ரவ ஸம்க்ஞகானாம் விச்வேஷாம் தேவானாம் ஸ்தானே த்வயா க்ஷண: கரணீய: என்று விச்வேதேவஸ்தானத்தில் உள்ள பிராம்மணனுடைய கையில் அரிசியுடன் 2 தர்ப்பைகளை கொடுக்க வேண்டும்) ஓம் ததா (என்று பிராமமணனின் பதில்)

3. (அபஸவ்ய) பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹானாம், சர்மணாம், கோத்ராணாம் வஸு ருத்ராதித்ய ரூபாணாம், ததந்தர்யாமி பாரதீரமண முக்யப்ராணாந்தர்கத ப்ரத்யும்ன ஸங்கர்ஷண வாஸுதேவானாம் ஸ்தானே த்வயா க்ஷண: கரணீய: (என்று அபஸவ்யம் செய்துகொண்டு பித்ரு ஸ்தானத்தில் அமரச்செய்யப்படும் பிராம்மணனின் கையில் எள்ளுடன் 3 தர்ப்பைகளைக் கொடுக்கவேண்டும்) ஓம் ததா (என்று ப்ராம்மணனின் பதில்)

4. திலோதகம் கரிஷ்யே (என்று அபஸவ்யத்துடனேயே இருந்து திலோதகத்தை விட்டு) (ஸவ்ய) யவோதகம் கரிஷ்யே (ஸவ்யம் செய்துகொண்டு) யவோதகத்தை விடவேண்டும். பிறகு கலசார்ச்சனம் கரிஷ்யே (என்று ஸவ்யத்தாலேயே யவோதகத்தை விடவேண்டும்)

குறிப்பு :— ச்ராத்தத்தில் நிமந்த்ரணம் செய்விக்கப்படவேண்டிய பிராம்மணர்களுக்கு யோக்யதாம்சம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை விஸ்தாரமாய் இந்த நிரூபத்தின் முன் பாகத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. காரியானம் கலிமஹிமையால் யாரையும் பலிஷ்டமாய் கவ்விரிருப்பதாலும், மற்றும் பல அநானுகூலங்கள் பிராம்மண சமூகத்தை பாதித்து வருவதாலும், இப்பேர்ப்பட்ட பரிதாபகரமான நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொள்ள எமது முன்னோர்களான காருண்முள்ள மகரிஷிகளால் சாஸ்திரீயமாய் அனுமதிக்கப்பட்டுள்ள பிராம்மணர்களான தர்ப்பை பிராம்மணர்களை அந்தந்த பிராம்மணர்களின் ஸ்தானத்தில் வைத்து சடக ச்ராத்தம் செய்வதே உத்தமம்

(தொடரும்)

# உத்தராதி ஸ்வாமிகளின் மகா சமாராதனை.

மன்னார்குடிக்கடுத்த தெண்பரையில் ஜனவரி-மீ 18உ முதல் தொடர்ந்து ஐந்துநாட்கள் ஜொலித்து வந்திருந்த ஸ்ரீ மத்வமதத்தின் சுத்த வைஷ்ணவ தேஜோ வைபவம் ஆகாயத்தில் பிரகாசிக்கும் ஆதித்யனின் தேஜப்பிரபாவத்தையும் மிஞ்சியிருந்தது. இரவில் அநேக எலெக்ட்ரிக் டியூப் லைட்டுகளின் ஒளி நடுப்பகலின் பிரகாசத்தையே தந்திருந்தது. எலெக்ட்ரிக் தீபங்களுக்கு இடையே கண்களைப் பறிக்கும் வஜ்ரவைடூரியாதிகளிழைத்த ரத்னமண்டபம், தங்கமண்டபம், வெள்ளிமண்டபம், மாணிக்கத்தொட்டில் வரிசையாய் சுமார் 8 அடி உயரம் ஜோடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் பற்பல பகவன் மூர்த்திகள் இடம் பெறச்செய்யப்பட்டிருந்தனர். மந்திர கோஷங்களும், ஸ்தோத்திர பாடங்களும், ஹரிதாஸர்களின் கீர்த்தனங்களும், தாள சப்தங்களும், ஸ்ரீமான் சங்கீத கலாநிதி பல்லடம் சஞ்சீவிராவ் அவர்களின் சுருதி ஸுகமான வேணுகான த்வனியும், நாற்புறமும் அமைக்கப்பட்டிருந்த ஒலிப்பெருக்கிகளின் உதவியால் அவ்வூர் சுற்றி பல மைல் தூரப்ரதேசங்களையும் பவித்ரமாக்கி வந்தன. ஸ்ரீ ஸ்வாமிகள் பூஜித்திருந்த ஸ்ரீ மத்வாசாரியாரின் தேவதார்ச்சனையிலுள்ள பகவன் மூர்த்திகள், ஒவ்வொருவரும் நூதன நூதனமான நவரத்ன பூஷணங்களால் பூஷிதர்களாகி, சாக்ஷாத் வைகுண்டத்தின் காக்ஷியையே அளித்துவந்தனர். பிரதிதினமும் ஒவ்வொரு செய் பக்ஷணத்துடன், மிருஷ்டான்னம் ஸ்ரீ ஸ்வாமிகளின் நேர் பந்திவிசாரணையின் கீழ், மிக்க பரிவுடன் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு பரமாரப்பட்டுவந்தது. அனைவரும் ரஸிக்கும்படி எமது நண்பரான ஸ்ரீமான் வாதிராஜ பாகவதராலும், திருவாதி காலேஜ் வைஸ்பிரின்ஸ்பால் ஸ்ரீநிவாஸாசாரியார் பல்லடம் தாஸர் முதலியோராலும் ஹரிகதைகள் நடத்தப்பட்டன. தனித்தனியான போஜன மண்டபங்களும், குளிருக்கு அடக்கமாய் ஆயிரக்கணக்கானவர்கள் உறங்கவும் தங்கவும் நூற்றுக்கணக்கான அறைகளும் வசதிகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. சபா காரியதரிசி ஸ்ரீ S. ராமாசார் அறிவித்திருந்தபடி



பிலஷர் கார்களும் பஸ்ஸுகளும் வண்டிகளும், மன்னார்குடியில் எந்நேரமும் போஜனமும், பிரயாணிகளுக்கு விசேஷ சௌகரியம் தந்திருந்தன. சுகாதார விஷயத்திலும் போலீஸ் பந்தோபஸ்து விஷயத்திலும் உபாதிகள் ஏற்படாதபடியும் சர்க்கார் அதிகாரிகளின் பாரமறிப்பு இருந்துவந்தது. இயற்கையிலேயே ஸ்நானத்திற்கும் சௌசத்திற்கும் இக் கிராமத்தில் காவேரியும் குளமும் உண்டு. அதிகம் சொல்வானேன். ஸ்ரீ ராமராஜ்யத்தில் எப்படியோ அப்படித்தான் ஸ்ரீ ஸீதாஸமேத ஸ்ரீ மூலராமர் ஸ்ரீ திக்விஜய ராமர் தலைமையில் நடந்த இந்த மஹோற்சவத்தில், எல்லா சௌகரியங்களும் ஆனந்த கோலாஹலமும் குடிகொண்டிருந்தன. பற்பல தேசத்திய மாத்வ பண்டிதர்கள் பற்பல பாஷைகளில் பேசினர். ஹிந்தியில் வெகுநேரம் பேசிய ஓர் வயோதிக பண்டிதர் அனைவரையும் வீரரஸத்தில் மூழ்கச்செய்தது அதிசயமே. எல்லா பண்டிதர்களின் உபன்யாஸங்களுக்கு சிகரமாய், எமது இளம் பண்டித சிங்கமான குருவர்யர் ஸ்ரீ ஸத்யப்ரமோத தீர்த்த மகாஸ்வாமிகள் கர்ஜித்த ஆணித்தரமான நீண்ட சொற்பொழிவில், ஒவ்வொரு சொல்லும் கூட்டத்திலிருந்து அடுத்த அடுத்து பலத்த கரகோஷத்தை எழுப்பி வந்ததுடன், ஸ்ரீ மத்வமதத்தின் மேன்மையையும், ஸ்ரீ மத்வாசாரியாரின் மகத்வத்தையும், உத்தராதி மடத்தின் உயர்வையும், அனைவரின் உள்ளத்திலும் வேரூன்றச்செய்து வந்தது அதி ஆச்சரியமாய் இருந்தது. அதன் சாராம்சம் பிந்திவரும். அநேக தூரதேசங்களிலிருந்தும் கூட ஏராளமாய் வித்வான்களும் வித்யார்த்திகளும் இதர மதத்தினர்களும், லௌகிக ப்ரமுகர்களும் வந்திருந்தனர். கிரமப்படி வித்வத் பரீக்ஷைகளும் எல்லா சாஸ்திரங்களில் வாக்யார்த்த விசாரங்களும் நடந்தன. ஸ்ரீ ஸ்வாமிகளால் போன வருஷம்போல் பண்டிதர்கள் திகைக்கும்படி வெகு சிலாக்யமாய் சுமார் 6 மணி நேரம் நியாயஸுதாவின் அகண்டோபன்யாஸம் செய்யப்பட்டது. இரவில் ஸ்ரீ ஸ்வாமிகள் இரு கைகளாலும் சாமரம் போட்டுக்கொண்டிருக்க, பண்டிதபாமரர்கள் புடை சூழ, விமானத்தில் ஸுதா புஸ்தகத்திற்கு விசேஷ அலங்காரத்துடன் ஊர்வலம் நடத்தப்பட்டது. பல்லாயிரக்கணக்கான ஸ்திரீ புமான்

கள் பாலர்கள் அனைவருக்கும் தலா ரூபாய் ஒன்று பூரிதக்ஷிணை கொடுக்கப்பட்டது. சபா சம்பாவனை தலா ரூ. 100 முதற் கொண்டு அவரவர்களின் யோக்யதைக்கு தகுந்தபடி ரூபாய்களை கல்விமான்களுக்கு, தங்க கங்காளத்தில் நிரப்பி வைத்துக்கொண்டு, தங்கத் தாம்பாளத்தால் வாரிவாரி, ஸ்ரீ ஸ்வாமிகள் புன்னகையுடன் மந்திராக்ஷதையுடன் அளித்துவந்தார். எமது அபிப்பிராயத்தில் பல ஆயிரம் ரூபாய் செலவில் இவ்வாறு அதி அற்புதமான மற்றும் அநேக நிகழ்ச்சிகளுடன் நடந்த ஸ்ரீ உத்தராதி ஸ்வாமிகளின், மகா சமாராதனை உற்சவம், இத தென்னாட்டில், எமது மத்வதமதத்தின் ஸர்வோத்தமத்வத்தை பகிரங்கப்படுத்தி, இத் தென்னாட்டில் தொடர்ந்து 2 வருஷமாய் ஸ்தாபித்துவருவது இத் தென்னாட்டு மாத்வர்களின் மகாபாக்யமே ஆகும்.

---

## செய்திகள்.

மதுரை, ஸ்ரீ மத்வஸேவா ஸங்கத்தார், சங்கத்தின் பிரதான நோக்கமான ஸ்ரீ மத்வமத ப்ரசாரத்தை, அதன் காரியக் கமிட்டி மெம்பர்களில் ஒருவரான எமது நண்பர் ஸ்ரீமான் நதீதீரம் வேதாந்த ரத்னம் N. ஸ்ரீனிவாஸ சர்மாவைக்கொண்டு கெங்குவார்பட்டி, பெரியகுளம், மார்க்கயன் கோட்டை, சின்னம்மனூர், தேனீ, திண்டுக்கல், சிவகங்கை, மானாமதுரை, வத்திராயிருப்பு, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் செய்திருக்கின்றன ரென்று அறிவித்து, ஸ்ரீ ரகூத்தமஸ்வாமிகளின் ஸ்தோத்திரமும், வாழ்க்கை வரலாறும் அச் சங்கத்தாரால் பிரசுரிக்கப்பட்டிருப்பது எமக்கு அனுப்பப்பட்டிருப்பதை நாம் மகிழ்வுடன் வரப்பெற்றோம். முதல் தீர்த்தம் கந்தாக்ஷதை சம்பாவனை இவைகளை ஸ்திரமாய் தன் வம்சத்தார்களுக்கும் ஏற்படச்செய்த ஆத்யவம்சத்திய மூலபுருஷரான மகனீயரான ஸ்ரீ ஆத்ய வரதராஜாசாரியார், ஸ்ரீ ரகூத்தமரை அவமானப் படுத்தி இருந்தால், ஸ்ரீ ரகூத்தமர் அவரை தன் குரு என்று



பாவித்து, இம் மகத்தான மரியாதை அவருக்கு அளித்திருக்க மாட்டார், என்று ஸாமானிய அறிவுபடைத்த யாவரும் ஒப்புக் கொள்ளும்படியான விஷயத்தை, வேண்டுமென்றே திரித்து, "பண்டிதா: மத்ஸர க்ரஸ்தா:" என்று மாச்சரியங்கொண்ட ஒரு சிலர் துஷ்பிரசாரம் செய்த அஸத்தான விருத்தாந்தம் இந்த துண்டு பிரசுரத்திலேயும், இடங்கொண்டிருப்பது வருந்தத்தக்கதாய் இருக்கிறது.

---

## ஸ்ரீ ராகவேந்திர ஸ்தோத்திரம்

மூன்றாவது பதிப்பு தேவநாகரத்திலும் தமிழிலும் மூல சுலோகங்கள். தமிழில் அர்த்தமும், மகாவரப்ரதமான, சமீபத்தில் அஞ்ஜனத்தில் ஸ்ரீ ராகவேந்திரரால் அருளிய, அதி அற்புத மகிமை வாய்ந்த, ஸ்ரீ ராகவேந்திர யந்திரமும், ஸ்ரீ ராகவேந்திர அஷ்டோத்தர சத நாமாவளியும் கூடியது. சொற்ப காப்பிகள் சொற்பகாலத்திற்குதான் கிடைக்கும். அடைய விரும்புவோர் உடனே முந்துங்கள். பிரதி ஒன்றுக்கு தபாற் கூலியுள்பட அணு 7.

---

## எமது விக்ஞாபனம்.

இந்த இதழுடன் எமது மாத்வமித்திரன் இந்த 23வது வாலியத்தை முடித்துக்கொள்கிறது. அடுத்த இதழ் முதல் மாத்வமித்திரனுக்கு 24வது வருஷம் ஆரம்பமாகிறது. ஸ்ரீ ராம பட்டாபிஷேக மங்களகதையுடன் துவக்கும். மாத்வமித்திரன் பத்திரிகையில் வெளியாகும் விஷயங்களின் அரிய பெருமையும், அபூர்வதையும், சாஸ்திரீயத்தன்மையும், மிக்க பெரியோர்களாலும் கொண்டாடப்படும் ரீதியும், இனி வெளியிடப்படுபவைகளின் கௌரவமும், வாசகர்களுக்கு நன்கு அறிந்ததே. மாத்வமித்திரன் பத்திரிகை சந்தாதாரர்களின்

சந்தா பலத்தால் மட்டில் நடத்தப்பட்டு வருகிறதென்பதையும், இதர ஆளின முதலாளித்வத்தில் நடத்தப்படுவதில்லை என்பதையும் நாம் பன்முறை அறிவித்துள்ளோம். அடுத்த வருஷம் ஜூபிலியை நடத்திக்கொள்ளும்படி எமது சந்தாதார நேயர்கள் வழக்கப்படி அன்புகூர்ந்து சந்தாதுகையையும் உதவித் தொகையையும் அனுப்பி மாத்வமித்திரனை எப்போதும்போல் ஆதரிக்க வேண்டுகிறோம். மணியார்டரில் சந்தாதுகையை அனுப்பாத சந்தாதாரர்களுக்கு, அடுத்த இதழ், வி. பி. யில் அனுப்பப்படும். அதிகச் செலவு ஏற்படாதபடி எல்லோரையும் மணியார்டர் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர். மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸவிலாஸம், கும்பகோணம்.

## விசேஷ தினங்கள்.

210432

| | | |
|---|---|---|
| 4—3—51 | பானுவாரம் | ஏகாதசி உபவாஸம். |
| 5—3—51 | ஸோமவாரம் | சிரவணம் உப. இல்லை. விஷ்ணுப. உப. இல்லை |
| 6—3—51 | மங்களவாரம் | மகாசிவராத்திரி. |
| 7—3—51 | புதவாரம் | தர்சம். திலதர்ப்பணம். விஷ்ணுப. உப. |
| 19—3—51 | ஸோமவாரம் | ஏகாதசி உப. |
| 23—3—51 | சுக்கிரவாரம் | பௌர்ணமி. விஷ்ணுப. உப. |

Printed by N Subramania Iyer at Sri Venkateswar Power Printing Works
Edited & Published by Bhagavatha Ranganathachariar Kumbakonam.